# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 671/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 10.11.2025.**

| | |
|---|---|
| **Name : குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடை மேட்டில் குடியிருந்து தறி வேலை செய்கிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். 2020ம் வருடம் மதியம் 3 மணியளவில் வித்யா மந்திர் பள்ளி அருகே நின்று கொண்டிருந்த போது மில் வண்டி ஒன்று ஜலகண்டாபுரத்திலிருந்து வந்த போது நடந்து சென்ற வயதானவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக பெரியவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துபோய்விட்டார். மில் வண்டியை ஓட்டி வந்த நபரை நான் அடையாளம் பார்த்தேன். தற்போது பார்த்தால் அடையாளம் சொல்வேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) சம்பவ சமயத்தில் நான் தறி ஓட்டவில்லை என்றால் ஆமாம். தறி தொழில் சம்மந்தமாக வேலைக்கு சென்றேனா அல்லது வீட்டிலிருந்தேனா என்றால் நான் வேலைக்கு சென்று வந்த போது விபத்தை பார்த்தேன். நான் போலீசார் விசாரிக்கும் போது வித்யா மந்தில் பள்ளி அருகே நின்றிருந்ததாக

சொல்லவில்லை என்றால் நான் சொல்லவில்லை. சம்பவயிடத்திற்கு அருகில் வித்யா மந்தில் என்ற பள்ளி இல்லை என்று வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பள்ளி உள்ளது. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மதியம் 3 மணிக்கு நடந்தது.

3) சம்பவம் 4 மணிக்கு நடந்ததாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு நினைவில்லை. சம்பவயிடம் இறக்கமான பகுதி என்றால் ஆமாம். சம்பவயிடத்திற்கும் நின்றிருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 30 மீட்டர் தொலைவிருக்கும். என்னுடன் நண்பர் யாராவது நின்று பேசிக் கொண்டிருந்தார்களா என்றால் ஆமாம். அவர் பெயரும் குமார் தான். சம்பவத்தை என்னுடைய நண்பர் குமார் என்பவரும் நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் மட்டும் பார்த்ததாக சொல்லியுள்ளேன்.

4) நண்பருடன் பேசிக் கொண்டிருந்த போது எதிரி அதிவேகமாக வந்து மோதியதை நான் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நண்பருடன் பேசும் போது என் கவனம் நண்பருடன் பேசுவதில் இருக்கும் என்றும் அப்போது நேரடியாக பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன் யாருக்கு முதலில் தகவல் கொடுத்தேன் என்றால் இறந்தவரின் மகனுக்கு கொடுத்தேன்.

5) 5.30 மணமியளவில் போலீசார் சம்பவயிடம் வந்துள்ளார்கள் என்றும் நான் 03.30 மணிக்கு சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் மகன் வித்யா மந்திர் பள்ளியில் படிப்பதால் அவர்களை அழைத்து கொண்டு திரும்ப வரும் போது பேசிக் கொண்டிருந்த சமயத்தில் சம்பவத்தை நேரில் பார்த்தேன். நான் எந்த பக்கமிருந்து பேசினேன் என்றால் இடது பக்கமாக நின்று பேசினேன். வித்யா மந்திர் பள்ளி எங்குள்ளது என்றால் இடது பக்கமாக உள்ளது.

6) பள்ளியிலிருந்து குழந்தையை அழைத்து வரும் போது பார்த்தேனா என்றால் அழைத்து வந்து பேசிக் கொண்டிருந்த போது பார்த்தேன். குழந்தையை

அழைத்து கொண்டு வலது புறம் தான் நான் வரவேண்டுமென்றும், நான் இடது புறத்தில் நின்று என் நண்பருடன் பேசிக் கொண்டிருப்பதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் நான் அருகிலிருந்து பார்த்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சேவிகவுண்டர் பின்னால் வாகனம் வருவதை பார்க்காமல் இடது புறத்திலிருந்து வலது புறம் செல்ல முயற்சித்த போது இறக்கமான பகுதியில் வந்த வாகனம் வருவதை பார்க்காமல் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல.

7) வாகனம் அவர் மீது ஏறியதா என்றால் அடித்துவிட்டது. எதிரி அதிவேகமாக வாகனத்தை இயக்கி மோதியதிலிருந்து எவ்வளவு தூரத்தில் தூக்கி எறிந்தது என்றால் 8 அடி தூக்கி எறியப்பட்டார். உடல் முழுவதும் சிராய்ப்பு காயம் இருந்ததா என்றால் தலையில் காயம் இருந்தது.எந்த பக்கம் காயம் இருந்தது என்றால் தலை முழுவதும் ரத்தமாக இருந்தது. நான் சென்று உயிர் உள்ளதா என பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

8) அவர் உயிருடள் உள்ளாரா இல்லையா என தெரியாமல் உடனடியாக நான் ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மருத்துவமனைக்கு சென்ற பின்னர் தான் உயிரிழுந்ததாக தெரிந்து கொண்டேனா என்றால் சம்பவயிடத்திலேயே இறந்ததாக தெரிந்து கொண்டேன். அடிப்பட்டு உயிரிழந்த சமயம் நான் மட்டுமே இருந்தேனா என்றால் நான் பார்க்கவில்லை.

9) சேவி கவுண்டருக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாகவும், எதிரிக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 11:42:27 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 671/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 10.11.2025.**

| | |
|---|---|
| **Name : மோகன்ராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடை மேட்டில் குடியிருந்து நான் பரிட்சைக்கு படித்து வருகிறேன். இறந்தவர் என் அப்பாவின் அப்பா ஆவார். கடந்த 21.06.2020ம் தேதியன்று மாலை 4 மணியளவில் செலவடை மேட்டுக்கு கீழ் தாரமங்கலத்திலிருந்து வந்த மில் வண்டி ஒன்று என் தாத்தாவின் மீது மோதியதாக தெரிந்து கொண்டேன். கடந்த 21.06.2020ம் தேதி மாலை 05.30 மணிக்கு ஜலகண்டாபுரம் காவல் துறையினர் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் மாதேஷ் இருவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜரிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அசா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) சம்பவத்தை கேள்விப்பட்டு தான் சம்பவயிடம் சென்றேன் என்றால் ஆமாம். உடனே காவல் துறையினர் வரைபடம் வரைந்தார்களா என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு வரைபடம் வரைந்தார்கள் என்றால் மாலை 05.30 மணிக்கு வரைந்தார்கள். 4 மணிக்கு என் தாத்தா இறந்து போன நிலையில் அந்த சம்பவம்

குறித்து வழக்கு பதிவு செய்ய 2 மணி நேரம் ஏற்பட்டிருக்கும் என்பதால் போலீசார் சம்பவயிடம் வருவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 2 நாட்கள் கழித்து காவலர்கள் சம்பவயிடம் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர் என்றும் இறந்தவரின் உறவினரான என்னிடம் கையொப்பம் பெற்றனர் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவ இடத்தில் போலீசார் வரைபடம் வரைந்த போது இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 11:42:32 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 671/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 10.11.2025.**

| | |
|---|---|
| **Name : அருண்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடை மேட்டில் குடியிருந்து கம்பியூட்டர் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். இறந்தவர் என் தாத்தா சேவிகவுண்டர் ஆவார். கடந்த 21.06.2020 ம் தேதியன்று மாலை 5.30 மணியளவில் செலவடை மேட்டுக்கு கீழ் தாரமங்கலத்திலிருந்து வந்த மில் வண்டி ஒன்று என் தாத்தாவின் மீது மோதியதாக தெரிந்து கொண்டேன். என் தாத்தா விபத்தின் காரணமாக தலையில் காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) நான் அன்றையதினம் வேலைக்கு சென்றேனா என்றால் செல்லவில்லை. எதிரி அதிவேகமாக வாகனத்தை ஓட்டி என் தாத்தா மீது மோதிய விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். அவர் இறந்த பின்னிட்டு பிரேதம் எடுத்து செல்லும் போது என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றனர் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 11:42:38 +0530

Judicial Magistrate No.II,
Mettur.